என்றிருக்கிறது. அதற்கே இல்லை என்று சொல்லுகிறாரே அமைச்சர். அப்படி என்றால் எதற்கு அரசாங்கம், எதற்கு கல்வி இலாகா. அதுதான் எனக்குச் சந்தேகம் வந்திருக்கிறது. அது தான் ஒழுங்குப் பிரச்சினை.

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, புதிதாக ஒரு திட்டமும் இல்லை என்று அதற்குப் பொருள்.

திரு. க. சுப்பு: இங்கிலீஷ் டிரான்சலேஷன் தப்பா? அது ரிக்கார்டில் இருக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள். புதிதாக ஸ்கீம் இல்லை என்று சொல்லிவிட்டார், உட்காருங்கள்.

திரு. க. சுப்பு: இங்கிலீஷில் என்ன போட்டு இருக்கிறார்கள் என்றால் 'whether it is proposed to improve the standard of Education in the Panchayat Union Schools ....' என்று கேள்வி. ஸ்டான்டர்ட் ஆப் எஜுகேஷன் இம்புரூவ் செய்ய ஸ்கீம் இல்லை என்றால் என்ன பொருள், அப்புறம் சர்க்கார் எதற்கு?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேட்ட கேள்வியோடு நிறுத்துங்கள். மீண்டும் மீண்டும் அதே கேள்வியைப் போட்டு, கிளாரிபிகேஷன் கேட்டுக் கொண்டே இருக்கக் கூடாது. உட்காருங்கள்.

திரு. செ. இராமலிங்கம்: தலைவரவர்களே, ஊராட்சிப் பள்ளிகள் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களின்கீழ் இருந்தும், கல்வி இலாகாவை சேர்ந்த துணை ஆய்வாளர்கள் அடிக்கடி தலையிடுவதால் அவைகளில் கல்வியின் தரம் குறைகிறது. ஆகவே, அவற்றை ஒன்றியத்தின் முழு நிர்வாகத்தில் கொண்டு வர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, துணை ஆய்வாளர்கள் அடிக்கடி போய்ப் பார்ப்பார்களானால் நிச்சயம் கல்வியின் தரம் உயரும்.

சென்னை மாநகராட்சி.

* 662. வினா—திரு. சு. முத்துசாமி கரையாளர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரசு, சென்னை மாநகராட்சி விஷயங்களைக் கவனிக்க மேல் நிலைக் குழுவை நியமித்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் பரிந்துரையின் நகல் ஒன்று பேரவை முன் வைக்கப்படுமா?

ஒ

1978 மார்ச் 22]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்.

(ஆ) பரிந்துரை வரவில்லை. வந்தபின் அவசியமானால் வைக்கப்படும்.

திரு. சு. முத்துசாமி கரையாளர் : தலைவரவர்களே, அந்தக் கமிட்டியில் அங்கத்தினர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அந்த அறிக்கை எப்போது வரும் என்பதை அமைச்சர் அவர்கள் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அந்தக் குழுவின் உறுப்பினர்கள் 5 பேர். 31-5-1978-க்குள் அவர்கள் பரிந்துரை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அரசு கோரியுள்ளது.

திரு. மு. அரங்கநாதன் : சார். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் குழு பற்றி பதில் வந்தாகி விட்டது. அதை ஒட்டித்தான் மற்ற கேள்விக்கும் பதில் வரும். உட்காருங்கள்.

சென்னை மாநகராட்சிக் கணக்குத் தணிக்கை.

* 663. வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மாநகராட்சியில் 1977-78-க்கான ஆண்டுக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், தணிக்கை அறிக்கைகளின் நகல் ஒன்று பேரவை முன் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, சென்னை மாநகராட்சியின் வரவு செலவுகளைத் தணிக்கை செய்வது பற்றி நான் கேள்வி கேட்டு இருக்கிறேன். ஒரு ஆடிட்டும் அங்கே நடைபெறுவதாகத் தெரியவில்லை. அங்கே தணிக்கை செய்யப்பட்டு இருக்கிறதா என்று நான் கேட்டு இருக்கிறேன். இல்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்கிறார்கள். வரவு-செலவுகளைத் தணிக்கை செய்யாமல் இருப்பதற்கு என்ன காரணம்?